**செ. கு. எண்:098** **நாள்: 08.07.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை – 8.7.2017</u>

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், துரும்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு ரத்தினம் என்பவரின் மகன் திரு அய்யாறு என்பவர் **6.6.2017** அன்று விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின் கம்பியை எதிர்பாராதவிதமாக மிதித்ததில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், பாலப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு அர்ச்சுனன் என்பவரின் மனைவி திருமதி முனியம்மாள் என்பவர் **18.6.2017** அன்று தனது வீட்டருகில் உள்ள பொது குடிநீர் தொட்டியின், மின் மோட்டாரை இயக்கும் போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், பேரையூர் வட்ட, நல்லியத்தேவன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு சுப்பையா என்பவரின் மகன் திரு ராமசாமி என்பவர் **19.6.2017** அன்று ஆடு மேய்க்கச் சென்ற இடத்தில் எதிர்பாராதவிதமாக மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், அம்மணந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு எத்திராஜ் என்பவரின் மனைவி திருமதி வள்ளியம்மாள் என்பவர் **23.6.2017** அன்று அறுந்து கிடந்து மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், ஏளூர் கிராமம், பெருமாகவுண்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு கோபால் என்பவரின் மனைவி திருமதி தமிழரசி என்பவர் **19.6.2017** அன்று மின்கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. அய்யாறு, திருமதி. முனியம்மாள், திரு ராமசாமி, திருமதி வள்ளிம்மாள் மற்றும் திருமதி தமிழரசி ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**